தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

## வழக்கு எண்.10223/விசாரணை/2009

<u>விசாரணை நடைபெற்ற நாள் 22.09.2009.</u>

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,<br>எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு E.M.சுல்தான்,<br>36/42, புது பங்காரு காலனி,<br>K.K.நகர் (மேற்கு), சென்னை– 600 078. |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர்,<br>கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்,<br>நெடுஞ்சாலைத் துறை,<br>K.புதூர், மதுரை – 625 007.<br><br>பொதுத் தகவல் அலுவலர்,<br>கோட்டப் பொறியாளர் அலுவலகம்,<br>நெடுஞ்சாலைத் துறை,<br>சிவகங்கை.<br><br>பொதுத் தகவல் அலுவலர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>சிவகங்கை வட்டம்,<br>சிவகங்கை மாவட்டம். |

*****

மனுதாரர் திரு E.M.சுல்தான் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்கள் திரு M.ராஜு, துணைக் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம், நெடுஞ்சாலைத் துறை, மதுரை / திரு

K.K.மீனாட்சி சுந்தரம், கோட்டப் பொறியாளர் அலுவலகம், நெடுஞ்சாலைத் துறை, சிவகங்கை / திரு L.கணேசன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சிவகங்கை வட்டம் இன்று (22.09.2009) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 24.03.2009 அன்று பொதுத் தகவல் அலுவலர், கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம், நெடுஞ்சாலைத் துறை, மதுரை அவர்களிடம் 4 இனங்களில் தகவல்களைக் கேட்டு மனுச் செய்துள்ளார். 26.03.2009 அன்று மனுதாரருடைய மனு கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சிவகங்கை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 19.05.2009 அன்று மனுதாரர் துறைக்கு மேல் முறையீடு செய்துள்ளார். 16.06.2009 அன்று மனுதாரர் குறிப்பிட்டுள்ள நிலங்கள் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானதில்லையென்று கிராம நிர்வாக அலுவலர், கொல்லங்குடி தெரிவித்துள்ளதாகப் பதில் அனுப்பப்பட்டுள்ளது. தகவல்கள் முழுமையாக இல்லாததால் 09.06.2009 அன்று துறைக்கு நினைவூட்டுக் கடிதமும், 25.06.2009 அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடும் செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (22.09.2009) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள புல எண்.327/3 நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானதில்லையெனவும், மேற்பட்ட இடம் கால்வாய்ப் புறம்போக்கு எனவும் வட்டாட்சியர், சிவகங்கை தெரிவித்துள்ளதாகவும், இது தொடர்பாக விவரங்களுக்கு வட்டாட்சியர், சிவகங்கை அவர்களை மனுதாரர் தொடர்பு கொள்ளலாம் எனவும் மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி புல எண் இது நாள்வரை கையகப்படுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் நிலம் கையகப்படுத்துவது தொடர்பாகக் கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), இராமநாதபுரம் அவர்களைத் தொடர்பு கொள்ளுமாறும் மனுதாரருக்குத் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு உரிய தகவல்கள் 19.09.2009 அன்று அஞ்சலில் அனுப்பப்பட்டதாகப் பொதுத் தகவல் அலுவலர் விசாரணையில் கூறினார். அதனுடைய

நகல் விசாரணையின் போது மனுதாரருக்கு அளிக்கப்பட்டது. உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதால் வழக்கு இத்துடன் முடிவடைகின்றது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 23.09.2009** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

<u>வழக்கு எண்.10223/விசாரணை/2009</u>

பொதுத் தகவல் அலுவலர்,
கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்,
நெடுஞ்சாலைத் துறை,
K.புதூர், மதுரை – 625 007.

பொதுத் தகவல் அலுவலர்,
கோட்டப் பொறியாளர் அலுவலகம்,
நெடுஞ்சாலைத் துறை,
சிவகங்கை.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சிவகங்கை வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

திரு E.M.சுல்தான்,
36/42, புது பங்காரு காலனி,
K.K.நகர் (மேற்கு),
சென்னை– 600 078.

*"ptl"*